

பாமாலை 434 ஏகோபித்து சேருங்களேன்

1 ஏகோபித்து சேருங்களேன்

கர்த்தாவில் ஆனந்திக்கவும்,

விசாரம் விட்டோயுங்களேன்

கெம்பீரித் தாராதிக்கவும்,

Refrain

செய்வோம்! செய்வோம்!

திரியேகரைத் துதி செய்வோம்!

2 பராபரன் மெய் வஸ்துவாம்

தயாபரர் ஆண்டவரே

வந்தார் வையகத்திலேயாம்!

இரட்சிக்க வல்லவரே.

3 பிசாசின் உபாயங்களால்

பயங்கர மோசமுண்டாம்,

ஆனாலும் தேவாவியினால்

ஒத்தாசையும் ஜெயமுமாம்.

4 ஏகோபித்துப் பாடுங்களேன்

மகோற்சவானந்தத்தினால்

திரியேகரைப் போற்றுங்களேன்

கெம்பீரச் சங்கீதத்தினால்.